மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.88/2019

வாக்குமூலம்: வா.சா.1 முகமது யூசுப்

28.02.2024: சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– நான் எந்த முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் 4/19, பள்ளிவாசல் தெரு, பாலசமுத்திரம் என்ற முகவரியில் குடியிருக்கிறேன். நான் இந்து முஸ்லிம் லெப்பை. நான் எம்.காம். படித்துள்ளேன். நான் சொசைட்டியில் செயலாளராக பணியாற்றி வந்தேன். 2018ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டேன். 2ம் வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் அவர் எனது அண்ணன் மகன் ஆவார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வீதி ஆக்கிரமிப்பு செய்ததற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் என்னுடைய வழக்கறிஞர் மூலம் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். தாவாச்சொத்தின் சர்வே எண்.829/10, 829/12. என்னுடைய வீட்டின் சர்வே எண்.829/9. சர்வே எண்.829/11 என்பது கோவில் வீடு. அந்த கோவில் வீடு நான் பிறப்பதற்கு முன்பாக இருந்து இருந்து வருகிறது. அது எத்தனை வருடங்களாக வழிபாடு நடந்து வருகிறது என்றால் வழிபாடு செய்யமாட்டார்கள். அது கோவில் வீடு. கோவில் சம்மந்தமான சாமான்களை அங்கு வைத்திருப்பார்கள். இந்த வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் கருப்புச்சாமி மற்றும் சண்முகசுந்தரம் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். வீதியை ஆக்கிரமிப்பு செய்ததால் அவர்கள் இருவர் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய வீட்டில் நான் 25 வருடங்களாக குடியிருந்து வருகிறேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது).

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2024.02.28 12:35:34 +0530

District Munsif,

Palani.